[1990 மார்ச் 20

மணி 9.40

மாண்புமிகு திரு கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு சமுதாயக் கூடம் கட்டுவதற்கு 5 லட்சம் ரூபாய் முதல் 8 லட்சம் ரூபாய் வரை செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலும் மாநகராட்சி எல்லையில் நிலம் கிடைப்பது ரொம்ப சிரமமாக இருக்கிறது. நிதிநிலை அதை விட மோசமாக இருக்கிறது. அதனால்தான் மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் இப்படிப்பட்ட நிதிநிலையை ஒட்டி, சமுதாய நலக் கூடங்கள் கட்டுவதை நிறுத்தி வைப்பதென்று அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். உள்ளபடியே ஆதிதிராவிட மக்கள் வாழ்கிற பகுதிகளில் கஷ்டங்கள் இருக்குமானால் அங்கே ஏதாவது நிலம் கிடைப்பதற்கு வழியிருந்தால், சட்ட மன்ற உறுப்பினர் போன்றவர்கள் அந்த நிலத்தை இனாமாக வாங்கித் தந்தால், அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி எஸ். பி. சற்குணம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் நம்முடைய கலெக்டரின் அதிகாரத்திற்குள் வருகிற இடம் இருக்கிறது. எனவே அந்த இடத்தைப் பெற்று அந்த இடத்திலே சமூக நலக் கூடம் கட்டுவதற்கு, அதிகாரப் பூர்வமான உத்தரவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: அடுத்த நிதி ஆண்டில் இதைப் பற்றி, நிதி நிலையையும் ஒட்டி விவாதித்து, ஒரு முடிவுக்கு வரலாமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சா. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே நம்முடைய அமைச்சரவர்கள் சொல்வதுபோல, நகரத்தில் இடம் கிடைப்பது கடினம். இந்த நிலையிலே எனது தொகுதியில் ஓரிடத்திலே இடம் தேர்தெடுக்கப்பட்டு, கட்டிடம் கட்டி, அந்த சமூக நலப் பொதுக்கூடம் திருமணத்திற்காகப் பயன்பட்டு வந்தது. ஆனால் இன்றைக்கு அது நிர்வாக அலுவலகமாக மாற்றப்பட்டுள்ளது. மீண்டும் அந்த இடம் சமூக நலப் பொதுக் கூடமாக மாற்றப்பட்டு, பொது நிகழ்ச்சிகளுக்காகப் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்வி மாநகராட்சியைப் பொறுத்தது.

கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம்.

*3839 திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

1990 மார்ச் 20]

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் புதிய கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்பெறும்?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழுவதற்கு இடமில்லை.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் ஒரு வருவாய்க் கோட்டத்திற்கு ஒரு கூட்டுறவுத் துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தும் கொள்கை இருந்து வருவதாக நான் அறிகிறேன். அப்படியிருந்தும், என்னுடைய இராமநாதபுரம் மாவட்டத்திலே இருக்கிற பரமக்குடி கோட்டத்தில் ஒரு துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தாதது, பொது மக்கள் மத்தியில் ஒரு பெரிய குறையாகக் கருதப்படுகின்றது. ஆகவே கொள்கை அளவில் இருக்கும் அந்தத் திட்டத்தை, நடைமுறைப்படுத்தும் வகையில், உடனடியாக பரமக்குடியில் துணைக் கூட்டுறவுப் பதிவாளர் அலுவலகத்தை உருவாக்க அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே ராமநாதபுரத்தில் ஒரு சரக துணைப் பதிவாளர் அலுவலகம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த சரக துணைப் பதிவாளர் அலுவலகம் நிதிநிலை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துத் தெரிவிக்கின்ற தேவையின் முக்கியத்துவம் கருதி, இது, அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக, டி.பி.ஏ.பி. கீழ் இடம் பெற்ற மாவட்டமாக, தொடர் வறட்சி மாவட்டமாக கருதப்படுகிற காரணத்தால், மிகப் பெருமளவுக்குப் பின்தங்கியுள்ள அந்த மாவட்டத்தில், நடப்பு ஆண்டில், பரமக்குடியில் துணைக் கூட்டுறவுப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறேன். வருகிற ஆண்டில் அது கவனிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு நில அடமான வங்கி.

*4003—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வத்தலகுண்டில் கூட்டுறவு நில அடமான வங்கி ஆரம்பிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து கொடைக்கானல் நிலவள வங்கி மகாசபை என்ன தீர்மானம் எடுக்கிறதோ, அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் அரசு தொடர் நடவடிக்கை எடுக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொடைக்கானல் மலையில் இருக்கிற நிலவள வங்கிக்கு வத்தலக்குண்டில் இருக்கிற மக்கள் போக முடியவில்லை என்ற காரணத்தாலேதான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், உங்களுக்கும் மனு எழுதிக் கொடுத்து, வத்தலகுண்டில் நிலவள வங்கி வைக்க வேண்டுமென்று நான் கேட்டிருக்கிறேன். அதற்கு இடமெல்லாம் பார்த்த பிறகு, மீண்டும் இதை கொடைக்கானலில் சேர்க்க வேண்டுமென்றால், இந்தக் காரியம் நடக்குமா, நடக்காதா என்பதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மணி 9.45

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் வத்தலகுண்டில் ஒரு நிலவள வங்கி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு இருந்தார்கள். அந்தக் கோரிக்கையை மையமாக வைத்து அரசு பரிசீலனை செய்தது. வத்தலகுண்டில் புதியதொரு நிலவள வங்கி ஏற்படுத்துவதற்கு இயலாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே 'நாட் வயபிள்' என்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தாலே கொடைக்கானலில் உள்ள நிலவள வங்கியை வத்தலகுண்டுக்கு மாற்றலாமா என்று அரசு பரிசீலனை செய்தது. அப்படி பரிசீலனை செய்கின்ற நேரத்தில் சட்டப்படி